# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 140/மா/2022**
**நாள் : 28.09.2022**

திரு. M. விஜயன்,
சென்னை– 600 081. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–15,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, கருணாநிதி நகர், 4வது தெரு, கதவு எண்.3/13, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M. விஜயன் என்பவரின் 25.08.2022 நாளிட்ட மனு 27.08.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 140/மா/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## <u>ஆணை</u>

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, கருணாநிதிநகர், 4வது தெரு, கதவு எண்.3/13 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M. விஜயன் தனது முறையீட்டு மனுவில்,

1. "சென்னை – 600 097, துரைப்பாக்கம், மண்டலம் - 15, வார்டு – 194, கதவு எண்.140, (ராஜீவ் காந்தி சாலை) OMR சாலையில், பார்க் பிளாசா (Hotel Park Plaza) என்ற ஹோட்டல் சுமார் 55,503 சதுர அடியில் அமைந்துள்ளது. இதனுடைய சொத்து வரி எண்.15-194-00785-000 ஆகும். இந்த ஓட்டலில் மொத்தம் 129 தங்கும் அறைகள் உள்ளன. இதில் டீலக்ஸ் அறைகள் -3, இரு படுக்கை கொண்ட அறைகள் – 66, மற்றும் ஒரு படுக்கை கொண்ட அறைகள் – 60 ஆகும். இவற்றில் டீலக்ஸ் அறைக்கு நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.7,450/-. இரு படுக்கை கொண்ட அறைக்கு நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.5,000/- மற்றும் ஒரு படுக்கை கொண்ட அறைக்கு நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2,500/- என வசூலிக்கப்படுகிறது. இதற்கான அரையாண்டு சொத்து வரியாக இவர்கள் சென்னை மாநகராட்சிக்கு ரூ.44,97,606.00/- (ரூபாய்

நாற்பத்தி நாலு லட்சத்து, தொண்ணூற்று ஏழாயிரத்து, அறநூற்று ஆறு மட்டும்) செலுத்தி வந்தனர்.

2. இந்நிலையில் தற்போது மேற்கண்ட 129 அறைகளையும் A/c தனி அறையாக மாற்றப்பட்டதாக கணக்கு காட்டி அறை ஒன்றுக்கு ரூ.2,000/- மட்டுமே வாடகை வசூலிப்பதாக மாநகராட்சிக்கு தவறான கணக்கு காட்டி தற்போது அரையாண்டு சொத்து வரியாக ரூ.12.37,410.00/- (ரூபாய் பன்னிரண்டு லட்சத்து, முப்பத்தி ஏழாயிரத்து நானூற்று பத்து மட்டும்) வரியாக செலுத்துகிறது. இந்த தவறான கணக்கீடு மூலம் அரையாண்டுக்கு ரூ.32,60,196/- தொகையும் ஒரு வருடத்திற்கு ரூ.65,20,392/- (ரூபாய் அறுபத்து ஐந்து லட்சத்து இருபதாயிரத்து முன்னூற்று தொன்னூற்று இரண்டு மட்டும்) இந்த ஒரு ஓட்டலில் மட்டும் சென்னை பெருநகர மாநகராட்சிக்கு இழப்பு ஏற்படுகிறது. மேலும் இந்த ஓட்டலுக்கு சொத்துவரி மறுமதிப்பீடு மூலம் சொத்து வரி குறைப்பு முறையாக கள ஆய்வு செய்யாமல் மாற்றம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

3. பெருநகர சென்னை முனிசிபல் சட்டம் - 1919, மற்றும் வரி விதிகள்படி, சென்னை பெருநகர மாநகராட்சி பகுதிகளில் உள்ள சிறப்பு வகை கட்டிடங்களான 1.தங்கும் வசதியுடன் கூடிய ஹோட்டல்கள் 2. கல்யாண மண்டபம் 3. திரையரங்கம் 4.மருத்துவமனைகள் ஆகியவற்றில் வசூலிக்கும் கட்டணம்/வாடகை அடிப்படையில் இல்லாமல் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு விதிக்கப்படும் சொத்து வரி போல கட்டிடத்தின் பரப்பளவிற்கு ஏற்றவாறு, அதாவது அவர்கள் பயன்படுத்தும் மொத்த கட்டிட பரப்பளவு அடிப்படையில் சொத்து வரி கணக்கிட்டு வசூலிக்க வேண்டுமென்று சட்டம் தெளிவாக குறிப்பிட்டுள்ளது.

4. அதன்படி ஹோட்டல்களில் அதன் தங்கும் அறை வாடகை குறைக்கப்பட்டாலும், அல்லது சில அறைகளை ஒன்றிணைத்து அறை எண்ணிக்கை குறைக்கப்பட்டாலும் அதன் சொத்து வரியில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது. மேலும் சொத்துவரி மறுமதிப்பீடு என்பது மதிப்பீடுகளில் உள்ள குறைபாடுகளை களைந்து ஒழுங்குபடுத்துவதாகும். அதாவது குறைவாக உள்ள சொத்து வரியினை நிவர்த்தி செய்து உயர்த்துவது, மோசடியாக, சில சட்ட விரோதமாக ஆதாயம் பெரும் வண்ணம் சரியாக உள்ள சொத்து வரியினை குறைக்கக்கூடாது. இந்த மோசடி தொடர்பாக நான் ஏற்கனவே சம்பந்தப்பட்ட மண்டல அலுவலருக்கு புகார் கடிதம் 04.07.2022 அன்று அனுப்பினேன். அதற்கு எனக்கு அனுப்பிய பதிலில் எனது புகார் மனு சென்னை மாநகராட்சி, ரிப்பன் மாளிகையில் உள்ள வருவாய்த்துறை தலைமை அலுவலகத்திற்கு அனுப்பியுள்ளதாகவும் முழு கோப்பு கிடைத்தவுடன் விளக்கம் அளிக்கப்படும் என பதில் அளித்துள்ளனர். ஆனால் தற்போது வரை எந்த நடவடிக்கையும் இல்லை. இந்நிலையில் இதே தகவல் தொடர்பாக நான் RTI சட்டம் மூலம் கோப்பு நகல் கேட்டு சென்னை மாநகராட்சி, ரிப்பன் மாளிகையில் உள்ள வருவாய்த்துறை தலைமை அலுவலகத்திற்கு மனு அனுப்பினேன். அதற்கு அவர்கள் அனுப்பிய பதிலில் மேற்படி தகவல்கள் மண்டலம் - 15ல் இருப்பதாக கூறி மனுவை அங்கே அனுப்பி வைத்துள்ளனர். ஆகமொத்தம் இரு தரப்பிலும் மனுக்கள் மாற்றப்படுவதை தவிர வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

5. மதிப்புக்குரிய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் வழக்கு எண்.128/மா/2022, என்ற இதே போன்ற சங்கதிகள் கொண்ட வேறு ஒரு வழக்கில்,

இதுபோன்ற வரி குறைப்பு கொரோனா காலகட்ட இக்கட்டான சூழ்நிலையை கருதி செய்யப்பட்டது என்ற வாதம் சென்னை மாநகராட்சியால் முன் வைக்கப்பட்டது, இது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல, கொரோனா காலகட்டத்தில் அனைத்து வகையான தொழில்களும் பின்னடைவை சந்தித்தாலும் அவற்றிடமிருந்து முறையாக சொத்து வரி வசூல் செய்யப்பட்டன. ஆனால் நட்சத்திர ஹோட்டல்களுக்கு மட்டும் வரி குறைப்பு செய்து சலுகை காட்டியது சரியல்ல. இது குடிமக்களுக்குள் வேற்றுமை பார்ப்பது போல ஆகிவிடும். இதுதொடர்பாக ஏதேனும் அரசாணை பிறப்பிக்கப்பட்டிருந்தால் அதுவும் நமது இந்திய அரசியலமைப்பு சட்டபிரிவு 14 மற்றும் 15ன்படி செல்லாததாகிவிடும். மேலும் ரஜினிகாந்த் - எதிர் சென்னை பெருநகர மாநகராட்சி 2020, என்ற வழக்கில் இதே போன்ற வாதத்தை ஏற்க மறுத்த மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் கொரோனா காலகட்டத்தில் திருமண மண்டபத்தை பயன்படுத்தினாலும் அல்லது பயன்படுத்தாமல் விட்டாலும் அதே அளவு சொத்து வரியினை கட்டியாக வேண்டுமென தீர்ப்பு அளித்துள்ளது. அந்த தீர்ப்பு இந்த வாதத்திற்கும் பொருந்தும். எனவே இது போன்ற எதிர்வாதத்தை நிராகரிக்க வேண்டுகிறேன்.

6. சென்னை பெருநகர மாநகராட்சியின் கடந்த 2022-23 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்படி ரூ.788.58/- கோடி ரூபாய் பற்றாக்குறை பட்ஜெட் ஆக போடப்பட்டது. மேலும் பல நல்ல திட்டங்கள் நிதி இல்லாமல் நிலுவையில் உள்ளது. இந்நிலையில் மேற்கண்ட மோசடியான, முறையற்ற வகையில் செய்து கொடுக்கப்பட்ட வரி சலுகையை நிறுத்தி சரியான சொத்து வரியினை முறையாக வசூலித்தால் சென்னை பெருநகர மாநகராட்சியின் நிதிநிலைமை சீராகும். எனவே, பொது நலனுடன் தாக்கல் செய்யப்பட்ட இந்த புகார் மனுவின் மீது உரிய விசாரணை செய்து மேற்கண்ட தவறுகளை களைந்து சென்னை பெருநகர மாநகராட்சிக்கு வரவேண்டிய தொகையை உரிய முறையில் வசூலிக்கவும், இந்த தவறுக்கு காரணமானவர்களின் மீது சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும் தங்களை நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் 14.09.2022 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 14.09.2022 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை. தனக்கு உடல் நலம் சரியில்லை என மின்னஞ்சலில் தகவல் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ன் மண்டல அலுவலர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் இருவரும் 14.09.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்கள் :**

"பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பு அதிகாரி தீர்மான நாள் 20.9.2018ன்படி விரிவாக்கம் செய்யப்பட்ட அனைத்து மண்டலங்களிலும் உள்ள ஓட்டல்கள், மருத்துவமனைகள், திரையரங்கம் ஆகியவை சிறப்பு வகை கட்டிட சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டது. அவ்வாறு நிர்ணயம் செய்யும்போது மேற்கண்ட ஓட்டலுக்கான அரையாண்டிற்கான சொத்து வரி ரூ.44,97,605/- என 24.11.2018 அன்று நிர்ணயம் செய்யப்பட்டது. மேற்கண்ட சொத்துவரி தொடர்பாக மேற்கண்ட ஓட்டலின் உரிமையாளர் சொத்து வரியை மாற்றம் செய்திட கோரி அளித்திருந்த மேல்முறையீட்டுக்

கடிதத்தை பெருநகர சென்னை மாநகராட்சி இணை ஆணையர் (வ (ம) நி) பரிசீலனை செய்தும், அதன் மீது விசாரணை மேற்கொண்டும் தனியரின் உறுதி மொழிப் பத்திரம் மற்றும் சம்பந்தப்பட்ட தனியரின் கணக்காயர் 2017–18ம் ஆண்டு ஓட்டலுக்கு கிடைக்கப்பெற்ற வருவாய் (ஒரு அறைக்கு ரூ 1652/–) என அளிக்கப்பட்ட சான்றிதழின் அடிப்படையிலும்; இணை ஆணையரின் 29.3.2019 நாளிட்ட குறிப்பின்படி ஒரு அறைக்கு ரூபாய் 2000/– வீதம் வரி நிர்ணயம் செய்யப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:

80,391 சதுர அடி – நிரந்தர கட்டடம்
1,336 சதுர அடி – நிரந்தரமற்ற கட்டடம்
மொத்தம் 129 அறை (Per Room Rs. 2,000/–)
ஆண்டு மதிப்பு - ரூ.1,14,69,383/-
அரையாண்டு வரி - ரூ.14,22,205/-

2017–18ம் இரண்டாம் அரையாண்டு வரை VVT Hotel (Park Plaza)ன் சொத்து வரியானது ஒரு அரையாண்டிற்கு ரூ.3,14,255/- வசூல் செய்யப்பட்டு வந்தது. 2018-19 முதல் அரையாண்டில் அரசாணையின் 73 MAWS Department-ன்படி விரிவாக்கம் செய்யப்பட்ட மண்டலங்களில் உள்ள சிறப்பு வகை கட்டிடங்களாக (ஹோட்டல், திரையரங்கம் மற்றும் கல்யாண மண்டபம்) சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டது. அதன்படி வசூல் செய்த தொகை ஒரு அரையாண்டிற்கு ரூ.12,42,410/- ஆகும். தற்பொழுது பொது சொத்து வரி சீராய்வு அரசாணை எண்.53 MAWS Department நாள்:30.3.2022ன் படி விரிவாக்கம் செய்யப்பட்ட மண்டலங்களில் தற்பொழுது உள்ள வரியான ரூ.6,10,500/-ஐ இரண்டு மடங்கு உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நேர்வு தொடர்பாக மண்டல அலுவலரான எனது 13.9.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம். இந்நேர்வு தொடர்பான பெருநகர சென்னை மாநகராட்சியின் தீர்மான நகல், இணை ஆணையரின் 29.3.2019 நாளிட்ட குறிப்பின் நகல் மற்றும் அதிகாரப் பகிர்வின் நகல் (Copy of delegation of power) ஆகியவற்றை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம் என தெரிவித்து அவற்றையும் சமர்ப்பித்துள்ளனர்.

மண்டல அலுவலர் தனது 13.9.2022 நாளிட்ட கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பு அதிகாரி தீர்மான எண்.800/20.09.2018ன்படி விரிவாக்கம் செய்யப்பட்ட அனைத்து மண்டலங்களிலும் உள்ள ஓட்டல்கள், மருத்துவ மனைகள் மற்றும் திரையரங்கம் ஆகியவை சிறப்பு வகை கட்டிடங்களாக சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட வேண்டும் . இது சம்மந்தமாக இரசீது எண்.15-194-00785-000 ஓட்டல் பார்க் பிளாசா (VVT Hotel)ன் சொத்துவரி மறு நிர்ணயமானது சிறப்பு வகை கட்டிடத்தில் செய்யப்பட்டது. அவ்வாறு செய்யப்பட்டதில் 80,391 சதுர அடி (நிரந்தரம்) 1,336 சதுர அடி (நிரந்தரமற்றவை) எனக்குறிப்பிட்டும் A/c Deluk - 3 அறை ரூ.7,450/- (Per Room) A/c Double – 66 அறை ரூ.5,000/- (Per Rooms) மற்றும் A/c Single – 60 அறை ரூ.2,500/- (Per Room) வீதம் நிர்ணயம் செய்யப்பட்டதில் அரையாண்டு சொத்துவரி ரூ.44,97,605/- நிர்ணயம் செய்யப்பட்டது அறிவிப்பு எண்.7/18-19/122912, நாள்:24.11.2018.

அறிவிப்பு எண்.7/18-19/122912, நாள்:24.11.2018ன் படி Notice-1 General Revised 2018–19, 24.11.2018 அன்று சொத்தவரி வசூலிக்கப்பட்டு சம்மந்தப்பட்ட சொத்தின் உரிமையாளருக்கு சார்பு செய்யப்பட்டது. சார்பு செய்யப்பட்டது சம்மந்தமாக தனியர் 14.12.2018 அன்று மேல்முறையீடு கடிதம் ஆணையர் அவர்களுக்கு அளித்துள்ளார். இதனடிப்படையில் இணை ஆணையர் (வ.(ம).நி.) அவர்களால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு தனியரின் உறுதி மொழிப்பத்திரம் மற்றும்

சம்மந்தப்பட்ட தனியரின் கணக்காயரின் (Charted Accountant) 2017-18 ஆம் ஆண்டு VVT Hotelக்கு கிடைக்கப்பெற்ற வருவாய் (ஒரு அறைக்கு ரூபாய் 1652/-) சான்றிதழின் அடிப்படையில் 29.03.2019 அன்று ஆணை பிறப்பித்துள்ளார். அறிவிப்பு எண்.10/18-19/144042, நாள்:30.03.2019

அதன் விவரம் :
80,391 சதுர அடி – நிரந்தர கட்டிடம்
1,336 சதுர அடி – நிரந்தரமற்ற கட்டிடம் மொத்தம் 129 அறை – Per Room Rs.2,000/-

அறைகள் தவிர்த்து உள்ள இடங்களுக்கு பரப்பளவு அடிப்படையிலும் மற்றும் அறைகளுக்கு ஒரு நாள் வாடகை வீதத்திலும் அறிவிப்பு எண்.10/18-19/144042ன்படி, நாள்:30.03.2019 அன்று படிவம்-10ஐ தனியருக்கு வழங்கப்பட்டுள்ளது.

புகார்தாரர் திரு. விஜயன், 04.07.2022 கொடுத்த புகாரின் அடிப்படையில் தலைமை அலுவலகத்திற்கு 29.07.2022 அன்று குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டதில் 11.08.2022 அன்று முழு கோப்பு பெறப்பட்டுள்ளது. தற்போது தீவிர சொத்துவரி வசூல் செய்யப்பட்டு வருவதால் சில நாட்கள் தாமதம் ஆகிவிட்டது; தவிர காலம் தாழ்த்த வேண்டும் என்ற நோக்கத்தில் இல்லை எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. முறைப்படி விசாரணை தலைமையிடத்தில் மேற்கொள்ளப்பட்டு சொத்துவரி திருத்தி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதில் எவ்வித முறைகேடும் இல்லை எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது எனத் தெரிவித்துள்ளார்.

மனுதாரரின் மனு, எதிர்மனுதாரர்களான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல – 15ன் மண்டல அலுவலர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் இருவரின் வாக்குமூலம் மற்றும் மண்டல அலுவலரின் 13.9.2022 நாளிட்ட அறிக்கை ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன :

2017–18ல் இரண்டாம் அரையாண்டு வரை VVT Hotel (Park Plaza)ன் சொத்து வரியானது ஒரு அரையாண்டிற்கு ரூ.3,14,255/- வசூல் செய்யப்பட்டு வந்தது. 2018-19 முதல் அரையாண்டில் விரிவாக்கம் செய்யப்பட்ட மண்டலங்களில் உள்ள சிறப்பு வகை கட்டிடங்களாக (ஹோட்டல், திரையரங்கம் மற்றும் கல்யாண மண்டபம்) சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டது. தற்பொழுது சொத்துவரி சீராய்வு அடிப்படையில் விரிவாக்கம் செய்யப்பட்ட மண்டலங்களில் தற்பொழுது உள்ள வரியான ரூ.6,10,500/-ஐ இரண்டு மடங்கு உயர்ந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதையும் அறிய முடிகிறது. எனவே சொத்துவரி விதிப்பில் அரசாணையின்படியே பெருநகர சென்னை மாநகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என அறியமுடிகிறது. இருப்பினும் சொத்துவரி மதிப்பீடு மாற்றம் செய்யும் போது பெருநகர சென்னை மாநகராட்சிக்கு எவ்வகையிலும் வருவாய் இழப்பு ஏற்படாத வண்ணம் மிகக் கவனத்துடன் செயல்பட்டு மாநகராட்சி வருவாயை உறுதி செய்ய வேண்டும் என பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல-15ன் மண்டல அலுவலருக்கு இம்முறைமன்றம் உத்தரவிடுகிறது.

மனுதாரர் கூறும் தினசரி வாடகை அளவினையும் அதன் உண்மைத்தன்மையையும் விதிகளின் அளவுகோல்படி மறுபடியும் சரிபார்க்க பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் கோரப்படுகிறார்.

Ultimately the Greater Chennai Corporation is to ensure that there is no loss of revenue to its exchequer on account of submission of shrunken income receipt shown by the Hotel. Moreover the Commissioner, Greater Chennai Corporation is requested to verify whether the procedure adopted by the Greater Chennai Corporation under the

helm of the Joint Commissioner, Revenue and Finance in revising the property tax quantum almost to 30% of the original demand issued to this hotel is in keeping with the standing instructions and financial procedure of the Greater Chennai Corporation in 2019. This is to ensure that there is no revenue leakage and evasion and loss to the Local Body.

2022–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 28–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. M. விஜயன்,
3/13, 4–வது தெரு,
கருணாநிதி நகர், தண்டையார்பேட்டை,
சென்னை – 600 081.

2) மண்டல அலுவலர்,
மண்டலம்–15, பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்.120, ராஜீவ் காந்தி சாலை,
சோழிங்கநல்லூர்,சென்னை – 600 119.

3) அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை – 600 003.

4) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக.